1996 ஆகஸ்ட் 22]

முற்பகல் 10-40

(ஆ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் திமிரிமரத்தூர் பகுதியில் வனத்துறையினர் துப்பாக்கிச் சூட்டில் 12 வயது மாணவன் இறந்தது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் திமிரிமரத்தூர் பகுதியில் வனத்துறை அதிகாரிகள் துப்பாக்கிச் சூட்டில் 12 வயது மாணவன் இறந்தது குறித்து, திரு. பெ.சு. திருவேங்கடம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ப. ரங்கநாதன், திரு. கே. மணிவர்மா, திரு. சி. ஞானசேகரன், திரு. டி. மணி ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருந்தார்கள். அந்த அறிவிப்பை எடுத்துக் கொண்டு, இப்போது திரு. தாமரைக்கனி அவர்களை இது குறித்து சுருக்கமாகக் கூற அழைக்கிறேன்.

***திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் வன இலாக்கா அதிகாரிகளுக்கும் அந்தப் பகுதியில் உள்ள கிராமப் பகுதி மக்களுக்கும் அடிக்கடி தகராறுகள் வந்து கொண்டிருக்கின்றன. என்ன தகராறு என்று கேட்டால், சந்தன மரக் கடத்தல் செய்பவர்களுக்கும்-அந்தப் பகுதியிலே உள்ள பொதுமக்களே அவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்-அவர்களுக்கும், வன இலாக்கா அதிகாரிகளுக்கும் அடிக்கடி தகராறு வருகிறது. இப்படித் தகராறு வந்து கொண்டு இருக்கையில், ஒரு தடவை சந்தனமரக் கடத்தல் செய்யும்போது, அவர்களைப் பிடிக்கிறார்கள். அப்படிப் பிடிக்கும்போது வன இலாக்காவினரைத் தாக்கிவிட்டுப் போய்விடுகிறார்கள். அந்தக் கிராமத்திற்குள் நுழையும்போது, அந்த கிராம மக்கள், கடத்தல்காரர்கள் நாங்கள் இல்லை, வேறு ஒருவர் என்றும், அது வனத்துறை அதிகாரிகளுக்கே தெரியும் என்றும் சொல்கிறார்கள். அப்படிச் சொன்னவுடன், வன இலாக்காவினர் லாரிகளில் ஏற்றுகிறார்கள். குற்றவாளிகளை அப்படி ஏற்றும்போது, அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் ஏற்றவிடாத அளவிற்கு, லாரியைச் சுற்றிக்கொள்கிறார்கள். உடனே வன இலாக்கா அதிகாரிகள் 12 முறை வானத்தை நோக்கிச் சுட்டு, அந்தப் பொதுமக்களையும் சுடுகிறார்கள். அப்படிச் சுடும்போது, 12 வயது சிறுவன் இறக்கிறான். ஆகவே, இறந்த அந்த சிறுவனுக்கு நீங்கள் நஷ்டயீடு வழங்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், எப்படி வன இலாக்கா அதிகாரிகளும், காவல் துறையினரும், சிறிய சிறிய குற்றங்களைச் செய்கின்ற சந்தன மரக்கடத்தல்

[திரு. இரா. தாமரைக்கனி] [1996 ஆகஸ்ட் 22

காரர்களைப் பிடிக்கிறார்களோ, அதேபோன்று பெரிய குற்றம் செய்கின்ற சந்தன மரக்கடத்தல் வீரப்பனைப் போன்றவர்களைப் பிடிக்காத காரணத்தால்-பொதுமக்கள் எல்லோருமே—அந்தந்தப் பகுதியிலே உள்ளவர்கள், திருடுவதற்கு, சந்தன மரங்களைத் திருடுவதற்கு சில பேர்கள் முயற்சி செய்கிறார்கள், சமூக விரோதிகள் துணையோடு. வன இலாக்கா அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள். ஆகவே வன இலாக்கா அதிகாரிகளும் துப்பாக்கியால் சுடப்பட்டிருக்கிறார்கள், சமூகவிரோதிகளால். வன இலாக்கா அதிகாரிகளுக்கும் காயம் பட்டவர்களுக்கும் நீங்கள் உதவி செய்யவேண்டும். அந்தச் சிறுவன் குடும்பத்திற்கும் உதவி செய்யவேண்டும். ஆகவே திருடுபவர்களுக்கு உதவியாக, சந்தனமரக் கடத்தலுக்கு உதவியாக இருப்பவர்கள் மீது, எத்தனை வழக்கு அங்கேயுள்ள காவல் நிலையத்தில் இருக்கிறது? அதற்கு வாரண்டுகள் இருக்கிறது. அந்த வாரண்டு உள்ளவர்களைக் கைது பண்ணாததால்தான் திரும்பத் திரும்ப இந்தச் சம்பவங்கள் எல்லாம் நடக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சந்தன மரக் கடத்தல் கேஸ் சம்பந்தமாக வாரண்டு உள்ளவர்களை எல்லாம், பிடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ப. ரங்கநாதன், திரு. மணிவர்மா, திரு. சி. ஞானசேகரன் ஆகியவர்கள் சார்பில் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 1-8-1996 ஆம் தேதி வனத்துறையினர், பலாமரத்தூர் என்ற கிராமத்திற்குச் சென்று, அங்கே குப்புசாமி என்பவர் தன்னுடைய பட்டா நிலத்தில் ரோஸ் மரம் வைத்திருப்பதை, தனக்கு வேண்டும் என்று அவர்கள் கேட்க, இவர் கொடுக்க மறுத்ததன் விளைவாக 5 பேர்கள் அந்த கிராமத்துக்காரர்களை லாரியிலே ஏற்றிக் கொண்டு, வனத்துறையினர் திருப்பத்தூர் ரேஞ்ச் ஆபிசுக்குக் கொண்டு வர முயற்சி செய்கிறபோது, பக்கத்திலே இருக்கிற கிராமத்து மக்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, பலாமரத்தூர், திமிரிமரத்தூர், தோப்பூர், கல்யாணமந்தை, நாட்டாமரத்தூர், வெள்ளாளனூர், சின்னகுட்டை, பெருங்காட்டூர் போன்ற கிராம மக்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, இப்படிப்பட்ட அநியாயத்தை வனத்துறையினர் செய்வது நியாயமா என்று கேட்க, அதற்கு வனத்துறையினர், ஏன் பிரச்சினை என்று அப்போதைக்கு குப்புசாமி என்பவரை விட்டுவிட்டு, அவர்கள் தங்களுடைய ரேஞ்சுக்குப் போய்விட்டார்கள்.

1996 ஆகஸ்ட் 22] [திரு. சி. ஞானசேகரன்]

முற்பகல் 10-45

இரவு வந்து பார்த்துக்கொள்கிறோம் என்று சொன்னதனுடைய விளைவாக அந்தக் கிராமத்து மக்கள் எல்லாம் ஜமுனாமருதூர் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் வனத்துறையினரும் அந்தக் கிராம மக்கள் மீது ஒரு புகாரை அன்று அளிக்க, பிறகு இரவு 10-30 மணிக்கு வனத்துறையினர் திமிரிமரத்தூர் கிராமத்திற்குச் சென்று மூன்று முறை வானத்தை நோக்கிச் சுட்டு, பிறகு வீட்டிற்குள்ளே இருக்கிற பெண்மணிகளை எல்லாம்கூட லாரியிலே ஏற்ற முற்படுகின்றபோது ஏற்பட்ட மோதலில்தான் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அந்தப் பையன் செல்வராஜ் தலையிலே புகுந்திருக்கக் கூடியது அரசு உபயோகப்படுத்தக்கூடிய துப்பாக்கியினுடைய குண்டுகள் அல்ல. பிரேதப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்னவென்று சொன்னால், நாட்டுத் துப்பாக்கிக் குண்டுகள் அந்த செல்வராஜ் என்கிற மாணவனுடைய தலையிலே, உடலிலே புகுந்து இருப்பதாக அவர்கள் அறிக்கை கூறுகிறது. நாட்டுத் துப்பாக்கியை வனத்துறையினர் வைத்துக்கொள்வது, சுடுவது நியாயமா, தப்பிப்பதற்காக அவர்கள் செய்கிற ஒரு முயற்சியா என்கிற அளவிலே இந்தப் பிரச்சினை எழுந்து, இன்று ஒன்றுமறியாத ஒரு அப்பாவி, செல்வராஜ் என்கிற பையன் - தங்கவேல் என்பவருடைய ஒரே மகன். அவருக்கு ஒரு ஆண். ஒரு பெண். - இந்தப் பையன் இறந்துவிட்டிருக்கிற காரணத்தினால் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்கக் கூடாது. அந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய கிராம மக்கள் எல்லாம் பயந்துபோயிருக்கிறார்கள். உண்மையிலேயே இதற்கு முன்னாலேயிருந்த ரேஞ்சர், அதேபோன்று டி.எப்.ஓ. எல்லாம் அந்தக் கிராமத்து மக்களுக்குப் பரிசு அளித்து அந்தப் பகுதியிலேதான் கூட்டாத்தூர் ரேஞ்சில்தான் இன்றைக்கு இந்தக் காடுகளிலே சந்தன மரங்களே இருக்கின்றன. அந்த அளவிற்கு ஊர்க்காரர்களே ஒத்துழைப்பு தந்து இந்த சந்தனமரத்தைக் காத்துக் கொண்டிருக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு ஏற்பட்டிருப்பது உண்மையிலேயே நியாயமா ? இந்தத் துப்பாக்கிக் குண்டுகள் உண்மையிலேயே சந்தனமரம் கடத்துகிற அந்த நபர்கள் மீது குண்டர் பேர்வழிகள் மீது பாயட்டும், சுடட்டும், அதை நிச்சயமாக வரவேற்கிறோம். சந்தன மரங்களை, ஜவ்வாது மலையில் காப்பாற்றுவதற்கு நாம் முயற்சி செய்கிறோம். ஆனால் இதுபோன்ற அப்பாவி மாணவன், செல்வராஜ் தாக்கப்பட்டதினுடைய விளைவு, இன்று அந்தப் பகுதி மக்கள் எல்லாம் அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய நிவாரண நிதியிலிருந்து 1 லட்சம் ரூபாய் அந்தப் பையனின் குடும்பத்தாருக்கு அளித்து, இதுபோன்ற நிகழ்வுகள் வராமல் காக்கவேண்டும். அதேபோன்று ஜவ்வாது மலை சந்தன மரங்களையும் காக்கவேண்டுமென்று நான் கேட்டு அமர்கிறேன்.

[1996 ஆகஸ்ட் 22

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. டி. மணி.

***திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலே சந்தன மரக் கடத்தல் என்பது ஒரு நிரந்தரமான நிகழ்ச்சி. அதைப் பாதுகாக்கின்ற வனத்துறையினருக்கும் சந்தன மரம் கடத்துகிறவர்களுக்கும் ஏற்பட்ட மோதல். அந்த மோதலின் விளைவாக ஒன்றுமறியாத சம்பந்தமில்லாத ஒரு மாணவச் சிறுவன் பலியாகி உள்ளான் என்பதுதான் இன்றைக்குள்ள பிரச்சினை. அதுமட்டுமல்லாமல் இந்த சந்தனமரம் கடத்துவதிலே நம்முடைய வனத்துறை இருந்தும், எந்த அளவிற்கு சாதாரணமாக வனத்திற்குள்ளே சென்று மரம் கடத்துவது என்பது வனத்துறை அதிகாரிகளுக்குத் தெரியாமல் சாதாரணமாகக் கடத்துவது என்பது அசாத்தியமான காரியம். இருந்தாலும்கூட இந்த சந்தன மரம் கடத்துவதிலே ஏற்பட்டிருக்கின்ற மோதலின் விளைவாக ஒன்றும் அறியாத ஒரு மாணவன் பலியாகி உள்ளான். ஆகவே இது சம்பந்தமாக, அந்தப் பலியான மாணவனுக்குரிய நஷ்ட ஈடும், அது தொடர்பான விரிவான ஒரு விசாரணையும் வேண்டும். ஏனென்றால் அவனுடைய தலையிலே பட்டிருக்கின்ற அந்தக் குண்டுக் காயம் என்பது சாதாரண நாட்டுத் துப்பாக்கியிலிருந்து வந்தது என்று சொல்லப்படுகின்றது. அந்த வகையிலே சரியான ஒரு விசாரணைகூட நடத்தி, இதிலே சம்பந்தப்படாதவர்களை பாதுகாக்கக் கூடிய அளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பெ.சு. திருவேங்கடம்.

திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி ஒரு துர்ப்பாக்கியமான நிகழ்ச்சிதான். ஆனால் ஏற்கெனவே நான் இந்த அவையிலே கூறியிருக்கிறேன். ஏற்கெனவே இருந்த அரசு வனத் துறை அதிகாரிகளைப் பயன்படுத்தி ஏராளமான சந்தன மரங்களைக் கடத்திக் கொண்டிருந்தார்கள். நம்முடைய அரசு, இப்போது நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் சரியான, ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்கின்றபோது அதிலே நல்ல அதிகாரிகள் சந்தனமரத்தைக் காப்பாற்றுவதற்கு உறுதுணையாக இருக்கிறார்கள். அதிலே பலபேர் ஏற்கெனவே ஏராளமான லாபத்தைக் குறுக்கு வழியிலே சம்பாதித்துக் கொண்டிருந்த வனத்துறை அதிகாரிகள் சில நாட்களாக அங்கே ஒரு ஸ்ட்ரைக்கூட நடத்தினார்கள். அவர்கள் எல்லாம் இந்த அரசாங்கத்தினுடைய இந்த நல்ல காரியத்திற்கு உறுதுணையாக இல்லாமல் அங்கே வேலைநிறுத்தம் எல்லாம் செய்தார்கள். அதனால் இன்னும் கொஞ்சம் கட்டைகள் அதிகமான அளவிலே போகின்ற ஒரு நிலைகூட ஏற்பட்டது.

1996 ஆகஸ்ட் 22] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அதனுடைய நிகழ்வின் காரணமாகத்தான் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் கூட நடைபெற்றது. ஆனால் எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர், அதேபோன்று மாவட்டக் காவல்துறை அதிகாரிகள் எல்லாம் நல்லமுறையில் இந்த நிகழ்ச்சியிலே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அது பாராட்டுக்குரிய ஒன்று. நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகளுடைய விசாரணைகூட நடைபெற்றிருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒரு செய்தி. அங்கே அனுமதி இல்லாமல் ஏராளமான நாட்டுத் துப்பாக்கிகள் அந்த மலையிலே இருக்கின்றன என்ற தகவல் சொல்லப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல அந்தத் துப்பாக்கிக் கூட நாட்டுத் துப்பாக்கி என்பதுதான் உண்மை. அதைக்கூட நம்முடைய அரசு, அனுமதி இல்லாமல் துப்பாக்கி வைத்திருக்கின்ற அந்தத் துப்பாக்கிகளையெல்லாம் கைப்பற்ற வேண்டும். காரணம் சந்தன மரத்தைக் கடத்துகின்றபோது துப்பாக்கி வைத்துக் கொண்டு வருகிறார்கள். அதை லாரியிலே ஏற்றுகின்றபோதும் 10 பேர் துப்பாக்கி வைத்துக் கொண்டு நிற்கிறார்கள். அதனால், அந்த மலையடிவாரத்திலே இருக்கின்ற கிராம மக்கள் பயப்படுகிறார்கள். ஆனால், இப்போது அரசு நல்ல முறையிலே நடவடிக்கை எடுப்பதை நான் பாராட்டுகின்றேன். ஆனால், இன்று அந்தப் பறக்கும் படையின் பணியையும் பயன்படுத்தினால், அங்கு இருக்கின்ற அந்த அதிகாரிகளையே நம்பி இந்தக் காரியத்தை ஒப்படைக்காமல், இன்னும் சிறப்பான முறையிலே நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க முடியும். அதே நேரத்திலே, அந்த இறந்த குழந்தைக்கு நல்லதொரு நஷ்ட ஈட்டை நம்முடைய அரசு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொண்டு முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை உயர்ந்த, தரம் வாய்ந்த சந்தன மரங்கள் தானாக விளையக்கூடிய ஒரு பகுதி. வெளிச் சந்தையில், இச்சந்தன மரங்களின் விலை மிக அதிகம். தற்போதைய நிலவரப்படி ஒரு டன் ரூ. 5 லட்சம் என்ற அளவுக்கு இருக்கின்றது. ஆகவே, இப்பகுதியில் கடத்தல்காரர்களுடைய கண் மிக அதிகமாக இருந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாகக் கடத்தல் அதிகரித்து வந்துள்ளது. இதற்கு, அப்பகுதியிலுள்ள மக்கள் மற்றும் வனத் துறையைச் சேர்ந்த சில பணியாளர்களும் உடந்தை என சந்தேகிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில், இந்த அரசு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி] [1996 ஆகஸ்ட் 22

அறவே கடத்தலை நிறுத்த வேலூர் மண்டலத்தில் புதியதாக வனப் பாதுகாவலர் மற்றும் மாவட்ட வன அலுவலர்களை மாறுதல் மூலம் நியமித்தது. இவர்கள் பணியேற்றபின், சந்தனக் கடத்தலைத் தடுக்கும் பணி தீவிரமாக முடுக்கி விடப்பட்டது. இதன் காரணமாக, ஒரு சில வனப் பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதோடு, வனச் சட்டப்படி அவர்கள் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டது. தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 16. இந்த நடவடிக்கைகளால் வெகுண்ட சில வனத்துறைப் பணியாளர்கள் ஒட்டுமொத்தமாக விடுப்பிலும், மருத்துவ விடுப்பிலும் செல்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் என்னையும் சந்தித்து, தாங்கள் கொடுமைப்படுத்தப்படுவதாகப் புகார் செய்தனர். இருப்பினும், உயர் அதிகாரியும், நானும் இவர்களைக் கண்டித்து, அரசின் நடவடிக்கைகளுக்கு முழுமையாக ஒத்துழைப்புத் தருதல் வேண்டும் என்று கண்டிப்புடன் திருப்பி அனுப்பிவிட்டோம். விடுப்பில் சென்ற பணியாளர்கள் உடனடியாகப் பணிக்குத் திரும்பி விட்டார்கள்.

இந்தச் சூழலில் 29-7-96 அன்று இரவு சந்தன மரக் கடத்தல்காரர்களால் திரு. சின்னையன் என்ற வனக்காவலர், துப்பாக்கியால் சுடப்பட்டு, குண்டுக் காயங்களுடன் வேலூர் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 1-8-96 அன்று காலை வனச் சரகர் தலைமையில் சென்ற ஒரு குழு, சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்ட ஐவரை பிடித்துச் சென்றபோது, அக்கிராமத்தினர் வனத்துறையினரைச் சூழ்ந்து கொண்டு, இந்த ஐவரையும் விடுவிக்க, கற்களால் தாக்கி, வன்முறையில் ஈடுபட்டு அவர்களை விடுவித்துச் சென்றனர். இந்தத் தாக்குதலில், வனத்துறையைச் சேர்ந்த பணியாளர்களில் சிலர் காயம்பட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காவல் துறைக்கு, இதுபற்றிய தகவல் கொடுக்கப்பட்டது.

ஒருபுறம் நிலைமை இவ்வாறு இருக்க, அதே நாளிலே அருகிலேயுள்ள கூட்டாத்தூர் என்ற கிராமத்தில் முகாமிட்டிருந்த வனப் பணியாளர்கள் பாதுகாப்பு கருதி, ஆலங்காயம் சரகப் பொறுப்பிலிருந்த வனப் பாதுகாவலர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு கூட்டாத்தூர் முகாமிற்குச் சென்றபோது, கிராமத்தினரின் தாக்குதலுக்குப் பயந்து அங்கிருந்த வனப் பணியாளர்கள் ஏற்கெனவே அப்பகுதியிலிருந்து ஓடி விட்டதை அறிந்து, திருப்பத்தூர் மாவட்ட வன அலுவலருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். அன்று இரவு 8 மணிக்கு வன அலுவலர் தலைமையிலான ஒரு குழு, வனப் பணியாளர்களைக் காப்பாற்றி அழைத்து வருவதற்காக ஜம்னாமரத்தூர் சென்று அடைய இருந்தார்கள். பின்னர், அங்கிருந்து கூட்டாத்தூர்,

1996 ஆகஸ்ட் 22] [திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி]

மேல்பட்டு ஆகிய இடங்களுக்குச் செல்லும் பாதையில் சென்றிருக்கிறார்கள். அவ்வாறு செல்கையில், கிராமப் பொது மக்கள் சாலைக்கு நடுவே பாறாங்கற்களைப் போட்டு, இக்குழுவை வழிமறித்தும், தாக்கியும், நாட்டு துப்பாக்கி கொண்டு சுட்டும் இருக்கிறார்கள். எண்ணிக்கையில், மிக மிகக் குறைந்த அளவிற்கு இருந்த வன அலுவலர்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவும், கூட்டத்தை விரட்டவும் வானத்தை நோக்கி சுடும்படி வன அலுவலர் தனது பணியாட்களுக்கு உத்தரவிட்டார். கூட்டம் கலைந்தபின், மாவட்ட வன அலுவலர் தெரிவித்தபடி 20 நிமிடங்கள் அங்கே இருந்துவிட்டு மேல்பட்டு கிராமத்திற்கு அலுவலர்கள் திரும்பியிருக்கின்றார்கள். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் திமிரிமரத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கவேல் என்பவருடைய மகன் 12 வயது செல்வராஜ் என்பவருடைய முகத்தில் நாட்டுக் குண்டுகள் பாய்ந்து இறந்து போனார். துப்பாக்கிச் சூட்டில் செல்வராஜ் இறந்தது குறித்து மறுநாள் காலை தகவல் அறிந்து சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர் திமிரிமரத்தூர் கிராமத்திற்குச் சென்று பொதுமக்களுடன் பேசியதுடன் திருவண்ணாமலை கோட்டாட்சித் தலைவர் மூலமாக ஒரு விசாரணை செய்யும்படி உத்தரவிட்டுள்ளனர். தற்போது அந்தப் பகுதியில் அமைதி நிலவுகிறது. காவல்துறையினர் பாதுகாப்பு இரவு முழுவதும் போடப்பட்டுள்ளது. சுமுக நிலைக்கு அந்தக் கிராமம் திரும்பும் வரை பாதுகாப்புப் பணிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வனத்துறைச் செயலாளர், முதன்மை வனத்துறைத் தலைவர் மற்றும் வனத்துறைத் தலைவர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று 4-8-96 அன்று சம்பந்தப்பட்ட பகுதிகளை பார்த்ததுடன் கிராம மக்களையும் சந்தித்து விவரம் அறிந்து வந்துள்ளது. இக்குழுவின் கருத்துப்படி சந்தன மரக் கடத்தலைத் தடுக்கும் முயற்சியில் அரசு எடுத்து வரும் கடுமையான நடவடிக்கைகளை விரும்பாத சில சமூகவிரோத சக்திகள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு இருக்கக்கூடும் எனச் சந்தேகிக்க இடம் உண்டு. மேலும் தற்போது அப்பகுதியில் எந்தவிதமான கொந்தளிப்போ அமைதிக்கு பங்கமோ இல்லை என்பதை இந்த மன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். இறந்த செல்வராஜ் என்ற இளைஞனுக்கு அரசு அறிவித்துள்ள சலுகைகள் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சருடைய விரிவான விளக்கத்திற்குப் பிறகு மேற்கொண்டு விளக்கம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை.